BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## முழுமையான சமுதாயங்களை உருவாக்குதல். நகரின் நிலங்களை உருமாற்றுதல்.

***கென்னடி ரோடு எஸ் (Kennedy Rd. S), நெடுஞ்சாலை எண்கள் 410 & 407 ஆகிய இடங்களில் இருக்கும் நிலங்கள் எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி குரல் கொடுங்கள்***

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 2, 2023) – இன்றைய தினம் துவங்கி, கென்னடி ரோடு எஸ் (Kennedy Rd. S), நெடுஞ்சாலை எண்கள் 410 & 407 ஆகிய இடங்களில் இருக்கின்ற நகரின் நிலங்கள் எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய கருத்துக்களைப் பெறவேண்டி, ப்ராம்ப்ட்டன் நகரின் குடியிருப்புவாசிகள், வணிகர்கள் மற்றும் உள்ளூர் வளர்ச்சிக்கு பங்களிப்போரின் பின்னூட்டக்கருத்துக்களை நாடுவதன் மூலம் சமுதாயம் அளாவிய ஒரு ஈடுபாட்டை நகர நிர்வாகம் உண்டாக்கவிருக்கிறது.

நகரின் 2040 ஆம் ஆண்டிற்கான தொலைநோக்குப்பார்வையில் குறிப்பிட்டபடி, "அப்டவுன் ப்ராம்ப்ட்டன்" இன் கிழக்குப் பகுதிக்கான புதிய வாய்ப்பாக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் உடைமையாகிய இந்த 45.3 ஹெக்ட்டேர் (112 ஏக்கர்) நிலமானது உருமாற்றம் அடைவதற்கான உட்பொதிவினைக் கொண்டிருக்கிறது என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது; இதுவே இந்தப் பிராந்தியத்தை முன்னேற்றுற்கான முன்னோடியான விஷயமாகும்

இந்த பெரிய, வளர்ச்சியடையக்கூடிய வளாகத்தை (முன்னர் "CAA லேண்ட்ஸ்" என குறிப்பிடப்பட்டது) ஒரு விளையாட்டு வளாகத்திலிருந்து ஒரு புதிய நகர்ப்புற மையமாக மாற்றுவதற்கான மூலோபாய வாய்ப்பை, 2019 இல் நடத்தப்பட்ட தொழில்நுட்ப பகுப்பாய்வானது அடையாளம் கண்டுள்ளது; இது அதிக மக்கள் நெருக்கம் கொண்ட குடியிருப்பு, வணிகம், ஓய்வு எடுத்தல் மற்றும் சுற்றுலா ஆகியவற்றுடன் இணைந்த முக்கிய போக்குவரத்து சார்ந்த வாய்ப்புகளுடன் இருக்கும் என இனம் காணப்பட்டுள்ளது.

தற்போது, இப்பகுதி CAA விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிக்கான அமைவிடமாக மட்டுமே உள்ளது (முன்னதாக பவரேட் மையம் என்றழைக்கப்பட்து). "முழுமையான சமூகங்களை" உருவாக்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் நகரத்தின் தொலைநோக்குப் பார்வையுடன் இந்த நிலங்களின் மறுமேம்பாடு இணைந்துள்ளது.

ஆர்வமுள்ள தரப்பினர் நிலங்களை, அதிநவீன, பல்நோக்கு கிரிக்கெட் வசதியை உள்ளடக்கிய ஒரு துடிப்பான நகர்ப்புறமாகவும், மக்கள் உலாவக்கூடிய சுற்றுப்புறமாகவும்

மேம்படுத்துவதற்கான முழுமையான திட்டங்களைச் சமர்பிப்பதற்காக, ஆர்வத்தை வெளிப்படுத்துதல்(Expression of Interest (EOI)) எனும் ஒரு திட்டத்தை நகர நிர்வாகம் அறிமுகப்படுத்துகிறது.

ஆர்வத்தை வெளிப்படுத்துதல்(Expression of Interest (EOI))க்கான கால அட்டவணை வரிசை

- Q1 2023 - ஆர்வத்தை வெளிப்படுத்துதல்-ஐ பிரசுரித்தல்
- Q2 2023 - ஆர்வத்தை வெளிப்படுத்துதல்-ஐ மதிப்பாய்வு செய்தல்
- Q3 2023 – நகரசபைக்கு அறிக்கையளித்தல்

**ஈடுபாடு**

முழுமையான சமுதாயம் என்பது தாங்கள் சேவையாற்றும் குடியிருப்புவாசிகள், வியாபாரிகள் மற்றும் உள்ளூர்க் குழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இப்பகுதிக்கான திட்டங்களில் எதைச் சேர்க்க ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் விரும்புகிறார்கள்? நாங்கள் முடிவெடுக்க உதவுவதில் உங்கள் உள்ளீடு முக்கியமானது. கருத்துக்கணிப்புக்காக பிப்ரவரி 28, 2023 வரை பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்கள் யோசனைகளை ஆன்லைனில் தெரிவித்து குரல் கொடுங்கள்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“நகரத்திற்குச் சொந்தமான இந்த இடத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு நம்பமுடியாத அளவிற்கு பரவசம் அளிக்கிறது; இந்த தனித்துவமான திட்டத்தைப் பற்றி மேலும் அறிய ப்ராம்ப்ட்டன் வாசிகள் அனைவரையும் ஊக்குவிப்பதோடு, நாம் எவ்வாறு முன்னேற முடியும் என்பதைப் பற்றி குரல் கொடுங்கள். இது ஒரு வெற்றுக் காகித நிலையில் இருப்பினும் இதில் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் முடிவற்றவை. மிகச் சிறப்பான விஷயம் ஒன்றைச் செய்ய நமக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது; மேலும் உலகத் தரம் வாய்ந்த பல்நோக்கு கிரிக்கெட் வசதியுடன் ஒரு ஜாம்பவான் திட்டத்தை உருவாக்குவது இதன் மையக்கருத்தாகும்; ப்ராம்ப்ட்டன் நகரின் சுறுசுறுப்பு பல தசாப்தங்களுக்கும் பிரகாசித்து மிளிர்வதற்கு, இந்த ஒரு தலைமுறைக்கு ஒரே ஒரு முறை கிடைக்கும் வாய்ப்பாகும்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இந்த உருமாற்றுவதற்கான வாய்ப்பில் பங்கு கொள்ள நமது சமூகத்தினருக்கு அதிகாரம் அளிப்பது என்பது, நகர நிலங்களுக்கான திட்டம் பற்றிய எங்கள் முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயங்களில் ஒன்றாகும். குடியிருப்பாளர்கள், வணிகங்கள் மற்றும் உள்ளூர் பங்குதாரர்களின் அறிவைப் பெறுவதன் மூலம், நிலைத்து நிற்கவல்ல, சிறப்பாக வாழும் வகையிலான மற்றும் நாம் சேவை செய்யும் மக்களின் உண்மையான தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையிலான முழுமையான சமூகங்களை நாம் உருவாக்க முடியும்.”

- *மைக்கேல் பல்லேஸ்ச்சி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; தலைவர், திட்டமிடல் மற்றும் மேம்படுத்தல், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்டனில் உள்ள இந்த நம்பமுடியாத பரவசமான வாய்ப்புக்காக நாங்கள் உள்ளீடுகள் மற்றும் ஆர்வத்தை வெகு தொலைவிலும் பரவலாகவும் தேடுகிறோம். அரசு, தனியார் துறை, இலாப நோக்கற்ற நிறுவனங்கள், கல்வியாளர்கள் மற்றும் பலருக்கும் இடையேயான கூட்டாண்மையைப் பார்க்கும்போது, கூட்டிணைதல் மற்றும் ஊக்கமளிக்கும் வகையிலான புதுமை படைத்தலை நாங்கள் காண்கிறோம்; இது எங்கள் நகரத்திற்கு மிகப்பெரிய மதிப்புக் கூட்டலை வழங்கும்.  நமது சமூகத்தின் தொலைநோக்குப் பார்வையைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன்; இந்த உரையாடலில் பங்கேற்று, அவரவர் கருத்தைக் கூறவும் அனைவரையும் நான் ஊக்குவிக்கிறேன்.”

- *ஹர்கிரத் சிங், துணை மேயர் & நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10; துணைத்தலைவர், திட்டமிடல் மற்றும் மேம்படுத்தல், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரின் அசுர வளர்ச்சி மற்றும் எல்லையில்லா வாய்ப்புகள் மூலம், சிட்டி லேண்ட்ஸ் திட்டம் போன்ற உருமாற்றும் வாய்ப்புகள் நமது சமூகத்தின் தேவைகள், அவசியங்கள் மற்றும் சுறுசுறுப்பான தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் நகரம் தொடர்ந்து இந்த உந்துசக்தியை உருவாக்கி வருகிறது. இந்தச் செயல்முறை முழுக்கவுமாக குடியிருப்பாளர்கள், வணிகங்கள், கட்டடம் கட்டுபவர்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து நிலையான வளர்ச்சியை உறுதிசெய்வதற்கும், வரி செலுத்துவோருக்கான மதிப்பை உறுதி செய்வதற்கும், ப்ராம்ப்ட்டனில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் நாங்கள் பெரிதும் கவனம் செலுத்துகிறோம்.”

- *மார்லன் கால்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca